உ

சிவமயம்.

கொப்புடையம்பாள் துணை.

MAR 1932



குன்றக்குடி.

# காவடிச்சிந்து.

காரைக்குடி

குமரன் அச்சியந்திரசாலையில் பதிப்பித்தது.

1932.

Q26:38·2195KU
M32

உ

சிவமயம்.

தியாகராஜஸ்வாமி துணை.

# மயூரகிரிக் காவடிச்சிந்து.

காரைக்குடி

மேலமடம் பழநியப்ப ஐயா அவர்களின்

குமாரர்

சேவு. பழ. சுப்பிரமண்யஞ் செட்டியாரின்

வேண்டுகோட்கிணங்கி

காரைக்குடி

அரு. அ. அரு. இராமஸ்வாமி செட்டியாரவர்களின்

குமாரர்

அருணாசலஞ் செட்டியார் இயற்றி இருந்ததை

காரைக்குடி

மெ. செ. ச. மூ. சிதம்பரம் செட்டியாரால்

காரைக்குடி குமரன் அச்சியந்திரசாலையில்

பதிப்பித்தது.

பிரஜோற்பத்தி-ஸு பங்குனி-மீ

10 MAR 1932

Q26138.2.1195 KV N32

183820

# சாத்துக்கவிகள்.

காரைக்குடி சதாவதானம்

சி. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள் இயற்றியது.

## வெண்பா.

முப்புவியும் போற்றும் முருகன் புராணமதைச்
செப்பினான் சிந்திற் சிறப்பாக—கொப்புடைய
வாமியடி யேதொழுது வாழ்ராம சாமியின்சேய்
நாமமரு ணாசலனா மன்.

கரைக்குடி அஷ்ட்டாவதானம் சிலேடைப்புலி

சித. சாமிநாதய்யர் அவர்கள் இயற்றியது.

## வெண்பா.

நன்னலஞ் சேருங்குன்றை நாதன்பாற் சிந்திசைத்துக்
கன்ன லமுதுகனி கற்கண்டாம்—என்னவுரை
செய்யவரு ணாசலனும் ஸ்ரீமான் ருசிகண்டு
வையகத்தோற் கீந்தான் மகிழ்ந்து.

2431

உ சிவமயம்.

வேலுமயிலுந் துணை.



# மயூரகிரிக் காவடிச்சிந்து.

## காப்பு.

### வெண்பா.

தேன்பொழியுஞ் சோலைச் சிகண்டிமலை வேண்மீதில்
நான்புகலுஞ் சிந்துக்கு நாவருளும்—மான்மகளை
முந்தி மணஞ்செய் முருகற்கு முன்வந்த
தந்திமுக வையனிரு தாள்.

## சிந்து.

புலவர்தொழு குன்றமலை யாண்டி (வானப்) மீதிற்
போற்றிசெயு மானந்தக்
    களிப்பைச்சொல் வேண்டி
அலங்கலணி விநாயகனைப் போற்றி (அம்பை) எங்கள்
ஆறுமுகன் பத்மமலர்த்
    தாளிணையை யேத்தி (1)

காரையம்பதிநல்ல பதியே (சீரார்) வாழுங்
கன்னிகௌமாரி கொப்
    புடையளைத் துதியே
வாரிலங்கு மீனாட்சி துணையே (வச்ர) இங்கு
வளருஞ்சொக் கண்ணல்வேம்
    பய்யன்மல ரிணையே (2)

நவவீரர் நதிபுவிமாது (காளர்) வள்ளி
நாயகிநேதய் வாணேமா
மாதுகலே மாது
இவர்களயனடியாரைப் போற்றி (மாயன்) எங்கும்
இசையோடு வசைபாடும்
புலவர்தமை யேத்தி (3)

கவிவாணர் தங்கள்முன்னாலே (பாடும்) கொசுகு
கருடனுக்குப் பறத்தல்கற்
பிப்பதைப் போலே
நவிலுதற்கேமனந் துணிந்து (மானே) சாமி
நாதன் றனக்கிப்பா
மாலையை யணிந்து (4)

சீராரும் வீடடைவோ மென்று (சுவணச்) நானுஞ்
செய்திட்ட தென்பதை
யறிந்துமே என்றும்
கூரார்கள் நாவலர்கள் குறையே (என்மேற்) யாருங்
குற்றங்கணீக்கியே
குணங்கொள்ளல் முறையே (5)

மீனவன் நாடதனில் மானே (போற்றும்) நிதிகள்
மிளிர்காரை யம்பதியி
தாகுமடி தேனே
வானளவு பொழிலில்விளையாடி (மேகம்) எங்கும்
வரிசிக்கும் மழையினால்
நீர்பெருகி யோடி (6)

போய்க்குளம் வயல்காலில் வீழும் (நித்தம்) அந்தப்
புனலின்மீன் றெங்குமாப்
பூகமதில் நாளும்
பாய்ந்துவிழு மதுவினால் விளையும் (செந்நெல்) வாழும்
பாவையர்கள் பேச்சினாற்
பட்டமரந் தழையும் (7)

அமைத்திருக்கும் மாளிகைகள் நேராய் (சுவர்ணத்) ஓங்கி
அமரர் நகற் கேணிபோ
விருப்பதனைப் பாராய்
சமயிகளிலங்குமா டங்கள் (சைவ) பஞ்ச
தருவைப்பழித்த சந்
திரந் தடாகங்கள் (8)

கவிவாணர் நிறைந்த கூடங்கள் (இது) பசனை
கமழ்மடம் மன்னவர்நி
றைந்த பீடங்கள்
குவித்திருக்குங் குவியலிலொன் றளர்ந்து (ரத்னம்) மாயன்
கூறுபாற் கடல்தனிற்
படுத்தனன் றளர்ந்து (9)

முறையிலகு நால்வருணர் நிறையே (வேத) சொல்ல
முடியாது யாசிப்போ
ரிலையென்ற குறையே
குறையலது வேறுகுறை யிலையே (என்னும்) தெருவிற்
கூடிவிளை யாடிடுஞ்
சிறுமிகளின் நிலையே (10)

சொல்லுகிறேன் சற்றுநீ கேட்டி (கொஞ்சம்) முத்துச்
சோராக்க அகிற்கட்டை
விறகெனவே மாட்டி
நல்லவை டூரியத் தட்டு (மூடும்) பானை
நற்பவள மாகும்பன்
னீருலைக் கிட்டு (11)

நிரவைரம் வைத்திழைத்த அடுப்பு (நீல) சிகப்பு
நெருப்பாகும் பச்சப்பிடி
யுறுநீலத் துடுப்பு
பருங்கோமே தகபுட்ப ராகம் (கரண்டி) என்னப்
பரப்பி விளையாடுவார்
சொல்லிலத னேகம் (12)

அல்லலறு மகரமா சத்தில் (தேவர்) திரு
ஆதிரைத் தினம் வணி
கேசரின் மனத்தில்
நல்ல நாளின்னென் றறிந்தார் (வணிகர்) சாமி
நாதற்கு மூன்று நாள்
விரதம்மி ருந்தார் (13)

கண்டத் தனற்குருவி னருளால் (காள) விஸ்வ
கம்மியனை யழைத்தழி
யாதுறும் பொருளால்
ஒண்சிவிரிப் பிடிபோற்றுளைத்து (சுவர்ணத்) அதி
லுயர்சித்ர மெழுதி நவ
மணிகளை யிழைத்து (14)

நீலக்கமான்மே லெடுத்து (கெம்பு) நல்ல
நீரோட்ட முறும்வச்ரப்
பலகணி தொடுத்து
சாலவிரு மயிற்றொம்பை யிணைத்து (அதிற்) முத்துச்
சாலர்கள் தொங்கு பன்
னுங்கங் கணைத்து (15)

செகினுவின் குஞ்சந்து லங்க (செண்டிச்) வணிகர்
செய்தார்களள விலாக்
காவடிவி ளங்க
வெகு கெட்டியாஞ் சிற்பி யென்று (இவன்) எங்கள்
விமலை கொப்புடையம்மை
கோவிலிற் சென்று (16)

காவடியைச் சந்நிதியில் வைத்து (அந்தக்) இரவிற்
கந்தனடி யார்களாம்
வணிகேச ரொத்து
மேவுசண் பங்கிநெய் யிட்டு (வாசம்) ஸ்நான
மே செய்து திருநீற
ணிந்து பொட்டிட்டு (17)

வந்தம்மை குமரனைப் போற்றி (ஆங்கு) தங்க
வள்ளத்திற் பாலிதப்
பொங்கலும் ஆற்றி
கந்தனுக் கவரவர்வெவ் வேறே (எங்கள்) இரண்டு
கலசத்தில் வைத்தார் பஞ்
சாமிர்த தாரை (18)

செங்காவி வஸ்த்திரங்கட்டி (அதிற்) சிகண்டிச்
செல்வன் முத்திரை வைத்துக்
காவடியிற் கட்டி
சங்கு சேகண்டிகோ சிக்க (முரசு) பெண்கள்
சாமரம் வீசமே
ளங்கள்வா சிக்க (19)

பொங்கல்நை வேத்தியம் ஆற்றி (செய்த) அவரைப்
பூசித்துக் கற்பூர
தீபங்க ளேற்றி
அங்கம்மை வேலர் புகழ் சொற்றூர் (வணிகர்) அவரின்
அருட் பிரசாதமும்
பூதியும் பெற்றூர் (20)

அணிமிகும்மா டத்தைப்பொருந்தி (தமது) தேவர்
அமுதெனும் அன்னமுதல்
வேணவை யருந்தி
பணிந்து துயில் புரிந்தே விழித்தார் (குகனைப்) கிழக்கிற்
பரிதிவரப் புனர்பூச
மென்றேக ழித்தார் (21)

உசக்காலக் கடனவர் முடித்து (மானே) செகத்தை
உதவு கொப்புடையம்மை
தீர்த்தத்தை அடுத்து
தசமோடு மொருதரம் ஆடி (ஸ்நானம்) பூதி
தனைக்குழைத் தணிந்தார் சண்
முகனையே நாடி (22)

கட்டினார் பொற்சரிகை வேட்டி (இடையிற்) அத்தர்
கனபமொடு கஸ்த்தூரி
பூசினார் கூட்டி
பட்டுப்பீ தாம்பரம் விளங்க (பனார்சுப்) கட்டிப்
பலமணி யிழைத்தவரை
ஞாணாது லங்க (23)

மகரியொடு பதக்கமுமி லங்க (ரத்ன) முத்து
மாலைபூ மாலையது
மார்பினில்வி ளங்க
செகராசர் கிரீடமிது வென்ன (சிரசிற்) செண்டிச்
செகினாவில் செய்த வெண்
பட்டதுவு மின்ன (24)

தகதகனக் கணையாழி சொலிக்க (விரலிற்) வேட்டி
தனிற்போட்ட அத்தரோடு
லவுண்டர்பரி மளிக்க
புகல் ரத்னக் கடகந்து லங்க (காத்திற்) கழுத்திற்
பூண்டார்கள் ருத் ராட்ச
மாலிகைவி ளங்க (25)

அணிபணியை விரித்துரைக்க மானே (அவரின்) நம்மால்
ஆகாது சேடனெனிற்
றெரியாது தேனே
வணிகேசர் கூடியே சேர்ந்து (அந்த) சிவை
வாழ் கோவில் வந்தார்கள்
சிந்தைகளி கூர்ந்து (26)

அண்டர்புகழ் அம்மையைக்கண்டு (வானின்) தீபம்
ஆற்றியே காவடியைத்
தோள் மீது கொண்டு
தொண்டர் நின்றானந்தம் பாட (நடுவிற்) சுத்தித்
தோள்மீது காவடியை
வைத்தவர்க ளாட (27)

துதிசொல்லி வேசையா கணடிக்க (குகனின்) மகா
தோரணஞ் சுருட்டி குடை
யாலவட்டம் பிடிக்க
அதிர்வெடிகளண்ட மிசை வெடிக்க (போடும்) முரசு
ஆர்த்திடத்தப்புகிடு
கிட்டியும டிக்க (28)

ஒரு புரம் நாதசுர மேளம் (அங்கு) மற்றும்
ஒரு புரஞ் சங்கு சே
கண்டி யெக் காளம்
மிருதங்கம் பாண்டு வாசிக்க (பிடில்) குழல்
வீணையொடு கெஞ்சிறுத்
தம்புர் கோ ஷிக்க (29)

இரு சாமரம் வீசிச் செல்ல (மாதர்) எங்கள்
இறைவிதனை யேத்தியே
கட்டியஞ் சொல்ல
முருகாப ராக்கென்று படிக்க (அடியர்) ஒளிகள்
முதிர்கின்ற பகல்வத்தி
தீவத்தி பிடிக்க (30)

சிகண்டிமலை தனக்கேக வேண்டி (சேய்வாழ்) அன்பர்
சென்றார்கள் தென்புரங்
கடைவீதி தாண்டி
திகழ்மேலை வீதிதனிற் சென்றார் (செல்வந்) ஏகா
தெசிமடந்தனி விலகு
மரிமுனம் நின்றார் (31)

பூமியோரடியளந்த வாமா (இந்தப்) கந்த
பூபனின் மாமனெனும்
ஆயிர நாமா
வாமியின் றமயனே பாராய் (சத்தி) கிருபை
வைத்துவணி கேசராம்
எமக் கருளைத் தாராய் (32)

என்று தொழுதேத்தியே கூடி (தாராய்) திரும்பி
யேகினார் சிவஞ்செயற்
குளத்துவழி நாடி
கன்னலெனச் செந்நெல்விளை நஞ்சை (இது) கொய்யாக்
கதலிமாப் பூகமொடு
தென்னையுறு புஞ்சை (33)

தென்னமர ரோட்டினினடந்தார் (கண்டு) சந்தர
சேகரன் வந்தமர் கின்ற
கொட்டகை கடந்தார்
சென்றார்கள் சாலையுறும் ரோட்டில் (ஆ ஆ) இந்தத்
தேனாற்றுப் பெருமை கேள்
நேம நன் னாட்டில் (34)

செயங்கொண்ட சோழீசர் வாழும் (எங்கள்) நேமத்
திருநகரார் மது நதீ
யீசர்க்கு நாளும்
உயர் பாண்டி நாட்டரசனாலே (கீர்த்தி) முன்னம்
உதவுதே னபிடேகஞ்
செய்தனர்பி னாலே (35)

ஒரு நாட்டே னிலையென்று நொந்து (குருக்கள்) மனம்
ஒரு மித்த அன்போடு
சலங்கொண்டு வந்து
கிருபையுறி விது தேனாமென்று (யென்மேற்) வாய்
கீழாகக் கலசத்தைத்
கவிழ்த்திட்டார் நின்று (36)

மிசைதேனின் நதியதுவ தாகி (மண்ணின்) யாரும்
மெச்சவே வந்ததடி
யிவ்வழிய தாகி
இசை யார்ந்த செல்வமொடு வாழும் (எங்கும்) எங்கட்
கிசைகுடமுழானத்திம்
மகுடம் வரும் நாளும் (37)

நதிப்பெருமை கேட்டவர் நடந்தார் (மது) ஓங்கும்
நாளீ கொச்சாலை
தனையுமவர் கடந்தார்
துதி பெருகு கோவிலூர் தன்னை (வானிற்) கண்டு
தோழுதேத்த விடுத்தனர்க
ளஞ்ஞானந் தன்னை (38)

கொண்டாடுங் கொற்ற வாளீசன் (யாருங்) இந்தக்
குவலயத்திற் பணி செயுந்
தொண்டர்தம் நேசன்
கண்டாயோ திருநெல்லை யமையை (பெண்ணே) பூமி
ககனமோ டென்றறஞ்
செய்திட்ட வுமையை (39)

ஆண்டவர் சந்நிதியிதுவ தாகும் (குருவாய்) காரை
யம்பதி யுதித்திங்
கமர்ந்தவர்க ளாகும்
பூண்டவர் சந்நிதி யிதுவதாகும் (துறவு) கருணை
பூண்டிடும் எந்தை சந்
நிதியிதுவ தாகும் (40)

கலைஞானம் முளங்குவதைப் பாராய் (மடத்திற்) இந்தக்
கயங்கட்டினுற் மாற்றார்
வணிகேசர் தோராய்
நிலையான பசுமடஞ்சோலை (கோக்கள்) வேதம்
நித்தமும் முழங்கிடும்
பாடகசாலை (41)

சத்திரம் முதல் யாவுந்தேர்ந்து (அன்ன) அன்பர்
சாலைவழி தே விவாழ்
திட்டுமலை ச்சேர்ந்து
சத்தியம் பிகைசரண மென்றுர் (பாா) பாதந்
தனைப்போற்றிப் பாதாக்
குடி நகரிற் சென்றுர் (42)

உபதேசம் செய்குருவி ருக்கும் (வணிகர்க்)மடத்
தோடுமுயர் நகரமடங்
கண்டனைவ ருக்கும்
சுபமருளும் ஐங்கரனை யேத்தி (மிகச்) மலையைத்
தொழுதார்கள் கண்டவுடன்
சண்முகனைப் போற்றி (43)

கந்தமிக வீசுநற்சோலை (இது) என்று
களரியே யங்கவர்கள்
சென்றிடுங் காலை
நந்தன வனங்கண்டு வந்தார். (ஆங்கு) வாழும்
நால்வாயன் றனைப் போற்றிக்
குளத்தைக் கடந்தார் (44)

தோப்பினிற் கூடியவர் மொய்த்தார் (இலுப்பைத்) அன்பர்
தோகைமலை நகரிதெனக்
காவடியை வைத்தார்
ஆப்பம் வடைபூந்தி பணியாரம் (தோசை) லட்டு
அதிரசம் பூரி சுய்யம்
எண்ணில் பலகாரம் (45)

வடிக்கு நைவேத்தியம் பண்ணி (அவர்கா) அடியர்
வயிற்றுப்பசி யாறியே
மலைக்கேக வெண்ணி
வடிதனை யெடுத்தவர் நடந்தார் (அக்கா) தென்ன
மரச்சோலைவழி மது
ராபுரி கடந்தார் (46)

உமையாளின் பாலன்ரத மேற (கைலை) ரிஷியா
யுள்ளோரும் மறையோரும்
மங்களங் கூற
இமையோர் கற்பகத்தின் மலர்தூவ (வானத்) குகனை
யேத்திமாலயன் யாரும்
இருபக்கம் மேவ (47)

மலர்தூவி யடியர்பூசிக்க (கடப்ப) யாழில்
மங்களம் பாடி நா
ரதனும் வாசிக்க
கலமான வெடிபிடி பிடிக்க (மிக்க) ரம்பை
நடனமிடப் பல்லியத்
தோசைதிசை வெடிக்க (48)

வடிநின்று வட்டமிட்டாட (அங்கா) வள்ளி
மணாளன் வந்தாரென்று
யெச்சரிக்கை பாட
வடிவேலன் தேர்க் கோலமாக (தங்க) தெற்கு
மாவீதி சரவணப்
பொய்கைவல மாக (49)

மேலைவையா புரியின் மறுகு (அவர்கள்) தாண்டி
மேவினார் சிவைவீர
மாகாளி யருகு
வாலை திரு மலரடியை யேத்தி (நாரி) சிறந்த
வடக்கு வையாபுரிவி
நாயகனைப் போற்றி (50)

வீதியின் சிறப்பதனைப் பெண்ணே (நால்) சொல்ல
வேண்டினாலயனுக்கும்
முடியாது கண்ணே
சோதியுறு தேர் நிலையிற் சேர (அந்தச்) எங்கள்
சுப்ரமண்யன் மலைப்பீடந்
தனி லுகந் தேர (51)

சத்தி மகன் காவடியை மானே (பரா) அன்ன
தானமடந்தனில் வைத்துக்
களித்தார்கள் தேனே
வைத்தடியார்களோடு முன்னம் (கூட) செய்த
மாதவத்தி லவர்களறு
சுவையமுத முண்ண (52)

திரை தனிற் சூரியன் மறைந்தான் (மேலைத்) கண்டு
சீதள மிகுந்தமதி
வந்தவணி றைந்தான்
இரவிகுணபால் தனிற் போந்தார் (பூசத்) குகற்கு
இன்பமுடன் வணிகருங்
காணிக்கை யீந்தார் (53)

போற்றியே வேல்தனை நிருத்தி (குகனைப்) யாரும்
புகளவலங் காரம் நை
வேத்தியந்தி ருத்தி
ஆற்றியே திருநீறு கொடுத்தார் (தீபம்) முத்தி
அடையலா மெனத்தரித்துக்
காவடி யெடுத்தார் (54)

மடத்தின் முன் றெடுத்தார்கள் நடனம் (அன்ன) அவர்கள்
வட்டமிட்டா டுறதைப்
புகல்வதுவுங் கடினம்
கடைத் தெருவுங்கடந்து தென்மறுகு (சீரார்) மேலைக்
கடைவீதி வழிவீர
மாகாளி யறுகு (55)

வந்தவர்கள் வட்டமாய்க்கூடி (சிவைமுன்) ஆடி
மாதாவே காவென்ன
வடவீதி நாடி
தந்திமுகன் றனைத்தொழுது தாண்டி (வந்து) கிழக்கு
சந்நிதியின் மயில் முனம்
நின்றாட வேண்டி (56)

கூடினார் வணிகேசர் நேராய் (அங்கு) நடனக்
கூத்தாட நடு நின்று
படிப்பதைப் பாராய்
பாடினரிவ்வானந்தக் களிப்பை (நன்றாய்) வேலன்
பாடவிது வென்றுலகர்
அடைந்தா ரெக்களிப்பை (57)

இரகிரு புரந்தனிலு மாட (மஞ்ஞை) கீர்த்தி
இயம்புகட்டிய மோதி
எச்சரிக்கை பாட
சுரலோகை கேட்டு மயிலாட (பாடும்) வந்து
கூடியுறும் வானோர்பு
கழ்ந்து கொண்டாட (58)

வடிவேலன் றனைப்போற்றி நடந்தார் (அங்கை) கிழக்கு
மா வீதி யன்னசத்
திரமுங் கடந்தார்
அடிவாரத் தைங்கரனைக் கண்டு (கிரியின்) எம்மை
ஆண்டருள் செய் தந்திமுக
வெனத் துதித்துக் கொண்டு (59)

மலைமீதிலேறு வதைப் பாராய் (அன்பர்) சொந்த
மாதே நாம் போய்ப்பார்த்து
வருகுவோம் வாராய்
மலைபபடிகள் மண்டபத்தின் சோக்கு (அளகார்) நம்மால்
வர்ணிக்க முடியாது
நடந்து கொண்டு நோக்கு (60)

என்று சொலி இடும்பன் முனஞ் சென்றார் (வேல் வேல்)
வத்தியே செய வீர [அவரை
வாகு முனம் நின்றார்
தன்பாவிற் சென்று வருந்தூதா (சூரன்) வெற்றி
தனைக் கண்டு வந்தருளு
மைய வருள் தாதா (61)

தொழுதவர்கள் கோபுரத்து ளுளைந்தார் (என்னத்) கணேச
சுப்ரமண்யன் றனைப்போற்றிப்
பவவினைக ளைந்தார்
அழுதிடுங் கணீரதுததும்ப (அன்பாய்) இன்ப
ஆனந்த வெள்ளத்தி
லாழ்ந்தனர் நிரம்ப (62)

காப்பக

வெற்றி முருகனை வெமைக்காத்தி (நாளும்) என்று
விளம்புவார் புகழைவரன்
முறையாக வேத்தி
நெற்றியக் கினியிற் பிரந்தாய் (யீசன்) வந்து
நீள்கர முகந்து சர
வணமூடி ருந்தாய் (63)

அங்கமரர் போற்றத்த வழ்ந்தாய் (நாதா) அம்மை
அணைத் தெடுக்க வாறுமா
முகமோ டெழுந்தாய்
கொங்கைதரு பால்வளமு ண்டாய் (உமை) அன்பு
கூர் கார்த்தியப் பெண்க
டமக்கருளும் விண்டாய் (64)

நாட்டரசனேடமர் புரிந்தாய் (உம்பர்) வீணை
நாரதன் விளம் பிடவி
டுத்தருள் சுரந்தாய்
மோட்டுறுக் காட்டியருள் பூண்டாய் (அவர்க்கு) தவஞ்செய்
முனிவரும் மயங்கவிளை
யாடியவ ஞண்டாய் (65)

நவவீரர் தம்பியாய்ப் படைத்தாய் (லெட்சர்) மலையை
ஞாலமிசை யடித்த சுரர்
தம்மைப் புடைத்தாய்
தவமுனிவற் கஞ்சலெனச் சொற்றாய் (வேள்வித்) கொடிய
தகரதனைப்பற்றி வரச்
செய்ததனி லுற்றாய் (66)

வேதனைச் சிறைதனி லடைத்தாய் (குட்டி) பூமி
விண் முதற்சொலு மண்டம்
யாவும் படைத்தாய்
நாதனுக்கருமறை மொழிந்தாய் (கைலை) முந்த
நான்முகன் சிறை நீக்கி
யங்கருளை பொழிந்தாய் (67)

முனிக்கருள் பொழிந்து தமிழ் சொற்றாய் (குறு) ஐயன்
மொழியவமர் தனக்கேக
வேலங்கு பெற்றாய்
கனவிரதம் விடமன முகந்தாய் (வாய்வு) பூத
கணம் லெட்சர் நவவீர
ருடன்வர மகிழ்ந்தாய் (68)

துயர் செயுங் கிரவுஞ்சம் பொடித்தாய் (மிக்க) ஆங்கு
தோன்றிடு ந்தாருகனை
வேலால் மடித்தாய்
உயர்சேஞ்ஞு ஊர் தனை யடைந்தாய் (உன்னால்) எங்கள்
உமைபாகனைப் போற்றிக்
கானங் கடந்தாய் (69)

வாகுவைத் தூதாக விடுத்தாய் (வீர) முதலில்
வருசூரன் றேற்றுத்து
திக்கவுயிர் கொடுத்தாய்
வாகுவாற் சுதர்களை யழித்தாய் (வீர) சிங்க
வதனனொடு மசுரரை
யழித்துக் களித்தாய் (70)

அமரிலரி தேரைச் செறுத்தாய் (சூர் செய்) அவனை
அயிலினாற் கொன்ற சுர
குலம் வேரறுத்தாய்
அமரரைக் குடியேறவைத்தாய் (வானின்) மயிலில்
ஆரோகணித்துச் சே
வற் கொடி படைத்தாய் (71)

நாட்டிலுக்ர வழுதியா யுதித்தாய் (பாண்டி) இந்ரன்
நல்கு மாரத்தினைய
ணிந்தவ மதித்தாய்
பூட்டிநான் முடி[illegible] க்காய் ([illegible]) [illegible]
போருக்கு வருமிந்ரன்
முடியைத் துடைத்தாய் (72)

மேருவைச் செண்டாற்புடைத்தாய் (மக) கடலில்
வேலை விவந்துன்ப
தந்தொழ வடித்தாய்
சீர்காழிக்குளத்கழுதா கண்டாய் (உமையை) அவளுந்
திருஞான வமுதளிக்க
வளந்தன்னி லுண்டாய் (73)

கதவங்கடைக்கப் படித்தாய் (மறைக்) சமணைக்
கழுவேற்றி மிக்க புகழ்
தன்னைப் படைத்தாய்
மத மோங்கி நிலைநிற்க வைத்தாய் (சைவ) அன்பன்
வாழ் மயிலை என்னைப்
பெண்ணாகப் படைத்தாய் (74)

நின்று தொழு தேத்தினர்களாத்து (என்ன) அச்சந்
நிதியிலகு மண்டபத்திற்
காவடியை வைத்து
தன்னிலுறு முத்திரையவிழ்த்து (கலசந்) இலகு
சக்கரையைக் கொப்பரையிற்
சாய்த்தனர் கவிழ்த்து (75)

காராவின் நெய்தேனும் பொழிந்து (அதிற்) மதுரக்
கட்டுமாங்கனி கரும்புச்
சாரைப் பிழிந்து
சீராகக் கண்டைப் பொடித்து (அங்கு) பெரிய
திராட்சைப்பழம் பேர்ச்சம்
பழத்தின் விதை எடுத்து (76)

நற் பலாப் பழச்சுளை எடுத்து (மிக்க) வாழை
நவ நீதக் கனி யோடு
சேர்த்ததனில் மடுத்து
உற்றிலகு சக்கரையை வார்த்து (வாங்கி) அதனை
ஒன்றாகப் பிசைந்தனர்க
ளன்பினுடன் சேர்த்து (77)

குகன் முடியிலதுதனைப் பெய்தார் (எங்கள்) வேதங்
கூறுகின்ற யாவுமபி
டேகங்கள் செய்தார்
அகமகிழ் விஞெடு தீபங்கண்டு (அங்கு) மிக்க
ஆனந்தமாய் வணிகர்
நமஸ்க்கரித்துக் கொண்டு (78)

புகழை யெடுத்தெடுத் தங்கு சொற்ருர் (ஐயன்)குகனைப்
போற்றிப் பிரசாதம் வி
பூதியும் பெற்ருர்
ககனமிசை மலர் மாரி தூற்ற (தேவர்) யாருங்
கண்டுவணி கேசர் தவம்
நன்றென்று போற்ற (79)

தரும் பஞ்சவமுதத்தைக் கொண்டு (முருகர்) வணிகர்
தம்பதிக் கேகியே
பசியார வுண்டு
திருவன சமலர் போற்களித்து (முகம்) வீட்டிற்
றிருமாது குடியேற
வாழ்ந்தனர் செழித்து (80)

கூறின வன் நிதியிலகு தனவான் (இதைக்) நேமங்
கோவில் குல சேகரபு
ரம்முடைய கனவான்
ஆறுபாய் இள நலம் உடையான் (தேன்) நாலெட்
டறம் புரியுங் கொப்புடையாட்
கடிமை செயும் நடையான் (81)

வாழ் காரைக்குடி வளருதாரன் (அறிஞர்) கீர்த்தி
மாராது வாழ் ராம
சாமி யின்கு மாரன்
வாழ்த்தவே கவிபுகலுந் தீரன் (புலவர்) உலகோர்
மதிக்கவளர் வணிகணரு
ணசலப் பேரன் (82)

தாரிலகுமைமங் கரன் வாழி (இதழித்) கைலைச்
சங்கரனும் உமைமாதும்
அடியாரும் வாழி
ஆறுமுகன் தெய்வானை வாழி (வள்ளி) சைவ
ஆகமம் புராணம் வே
தங்களும் வாழி (83)

மாதுதிரு மாதுகலை வாழி (புவி) லெட்சர்
மலராயன் திருமாலும்
நவவீரர் வாழி
மாது பூமன்னவரும் வாழி (நதி) வேத
மறையோரும் வையகமும்
வானும் வாழி (84)

நாவலர்கள் சூத்திரரும் வாழி (பாடும்) காரை
நகர்வாழி யேழுநகர்
வணிகேசர் வாழி
தேவனூறு சிகண்டிமலை வாழி (தேவ) இந்தச்
சிந்த னவும் நீடூழி
யாய் வாழி வாழி (85)

முற்றிற்று.



## எச்சரிக்கைக் கண்ணி.

மாவுறையுங் குன்றை யம்பதி மேவிய
மாமயிலின் வாசா—வெள்ளை
மாமகளின் நேசா—இந்தப்
பூவுலகந்தனில் மாதவர் நாவலர்
போற்றுமம ரேசா (1)

பார்புகழுஞ்சிகி மாமலைமேவிய
பாலகும ரேசா—அண்டம்
ஞாலம்புக ழீசா—வச்ர
வார்புனையுந்தனம் மேவு தெய்வானை
மகிழும் முரு கேசா (2)

பூதலமீது யர் வேதியர் போற்றிடும்
புள்ளிமயில் வாசா—குற
வள்ளிமகிழ் நேசா—மிக்க
சீதளமார் பொழில் நேம நன்றுடைறை
செந்தமிழின் றூசா (3)

மதிபுனையும் பா னுரொடு வாளுமை
மாதருளும் பாலா—மலர்
வேதத்கருள் சீலா—வானிற்
றுதி பெருகுங் குன்றை மாமலை மேவிய
தூயவடி வேலா (4)

விண்ணவபாதியர் வந்து தொழும அர
விந்தமலர்ப் பாதா—இங்கு
வந்தருளைத் தாதா—முக்கட்
பண்ணவன் மாமறை கேட்கச் செவிதனிற்
பகருங்குரு நாதா (5)

மாமகளும் புவி மாமகளும் புணர்
மன்னன்மரு கோனே—தமிழ்
முன்னம் மொழி வோனே—வேப்பந்
தாமங் கயற்கொடி யுடன்மது ரைப்பதி
தன்னைப் புரந்தோனே (6)

## எச்சரிக்கைக் கண்ணி வேறு.

ஆரார் சடைமுடியானருள் அறுமாமுகமணியே
சீரார்மயின்நாகத்தமர் தேவா யெச்சரிக்கை (1)

செப்போடுவல் லொப்பாய்முலை செப்பும் வளிநேசா
இப்பார்புகழ் மஞ்ஞைக்கிரி இறைவா யெச்சரிக்கை (2)

கலைமாதமர் சிகிவெற்பினிற் கமழும்முரு கேசா
மலைமாதொடு சிவனார் தருமகனே யெச்சரிகை (3)

திருமாதுறை சிகண்டிப் பருப்பதத்தார் குணசீலா
மருவே செறி குழலாருமை மைந்தா யெச்சரிக்கை (4)

வானுடிறை தருமாமகள் மகிழும் வடிவேலா
தேனுற்வரு பீலிச்சிலைத் தேவா யெச்சரிக்கை (5)

ஈமத்தினில் நடனம்புரி இறைவன்மகிழ் குருவே
நேமத்திரு நாடார்மலை நிருபா யெச்சரிக்கை (6)

## கட்டியம்.

சண்டப்பிரசண்ட விதண்ட மூதண்டகோ
தண்ட பாணிக்கி மருகன்
தத்திமித்தாள மோடொத்து நின்றாடிய
சதாசிவன் பெற்ற முருகன்
தண்டமிழ் நிறைந்திடும் அண்டரும் முனிவரும்
தாள்வணங்கிய வேலவன்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
சகல மோட்ச அதிகார கர்த்தன்.

## அகோதெப்படியென்றால்

ஐங்கரற்கிளைய ஆறுமாமுகவன்
ஈஸ்வரி புதல்வன் ஈராறுபுயத்தோன்
வள்ளிதெய்வானை மனமகிழ் கொழுநன்
சேவற்கொடியோன் சிகிவாகனத்தோன்
கருணைகடாக்ஷ வீட்சண்ணிய அலங்காரன்
உத்தண்ட மண்டலீகரன்
மதன மோகன வசீகரன்
பஞ்சபாண அவதாரன்
அஷ்டைஸ்வரிய சம்பன்னன்
துஷ்ட்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனன்
மந்திரமகா மாணிக்க மகுடாலங்காரன்
அகிலாண்டகோடி பிர்மாண்ட நாயகன்
ஆபத்பாந்தவன் அனாதரெட்சகன்.

அனந்தகோடி அண்டங்களும் இருநூத்தி இருபத்தி நாலுபுவனங்களும் சப்த சாகரஞ் சூழாநின்ற ஈரேழுபதினாலு லோகமும் காக்கும் வேலையே கைக்கொண்டு ஏகசக்ராதி பத்தியஞ் செலுத்தி ஒப்பற்ற சந்தரவட்டக் குடையின் நீழலிலிருந்தாளப் பெற்ற சிவசுப்பிரமணியக் கடவுள் அன்னதான முதலறம்பல செய்து இன்றையத்தினம்,

மாகாரைப்பதியில் வாழனைவோரையும்
அருள்புரிந்தென்றும் ஆள்கிறோமென்று
தீர்த்தப் பிரசாதம் திருநீறு கொடுத்து
பாவையருட பல்லிய முழங்க
நாவலர் போற்ற நல்விருதுடனே
குவலயம் புகழும் குன்றையம்பதியில்
விண்ணள வோங்க எண்ணிலா வணிகர்
பொன்னினாற்செய்த புனிதமண்டபத்திற்
நவரத்தினமும் நனிபெற இழைத்த
தமது ரத்தின சிம்மாசனக் கொலுவிற்கு
எழுந்தருளி வருகின்றார் வெகுபராக் எச்சரிக்கை.

முற்றிற்று.

ஷண்முகநாதன் திருவடி சரணம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்